தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2043, சித்திரை 4

2012 ஏப்ரல் 16, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வீறுஎய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்கண்
ஊறுஎய்தி உள்ளப் படும்."

எந்தச் செயலையும் மிகச் சிறப்பாகச் செய்து முடிக்கும் திறமையால் புகழ் பெற்றவரின் செயல் ஆற்றலாகிய வினைத்திட்பத்தை நாட்டை ஆளும் அரசர் அறிந்து பாராட்டுவார்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 91, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

91—

மின் மீட்டர்கள்

***5538—திரு. அ. சவுந்தரராசன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பழைய மின் மீட்டர்களை முழுமையாக மாற்றி, புதிய மின் மீட்டர்கள் பொருத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஆம், படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

திரு. அ. சவுந்தரராசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நான் நன்றி தெரிவிக்கின்ற அதேவேளையில், மீட்டர்கள் மிகவும் பற்றாக்குறையாக இருக்கின்றன. 2004-க்குப் பிறகு* Test bench *என்கிற ஏற்பாடு அகற்றப்பட்டுவிட்டது. கடந்த ஆண்டு* Regulatory Authority *ஒரு ஆணை பிறப்பித்திருக்கிறது. மீட்டர்களை 4 தனியார் நிறுவனங்களிடமிருந்து பெற்று, மின்சார வாரியம் 15-க்கு 15 அறை ஒதுக்கி, மீட்டரை வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டும்; அந்த மீட்டரை* consumer *வாங்கிக் கொடுத்தால் நாம் டெஸ்ட் செய்து அதைப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இந்த முறையின் மூலமாக இந்தப் பிரச்சினையைப் பெரிய அளவிற்குத் தீர்க்க முடியும். மின் வாரியத்திற்கும் இலாபம் வரும். ஆகவே, இதையும் கணக்கில் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போன்று ஆணைகள் வழங்கப்பட்டு, இப்பொழுது அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுப்படையாக தற்போது மின் இயந்திர வகையிலான பழைய மீட்டர்கள் ஏறத்தாழ ஒரு கோடியே 20 இலட்சம் இருக்கின்றன. அந்த ஒரு கோடியே 20 இலட்சம் மின் இயந்திர வகையிலான மீட்டர்களை மாற்றுவது பற்றிதான் நீங்கள் கேட்டிருந்தீர்கள்.* Mechanical meters—Conventional Electro-mechanical meters *என்று அதற்குப் பெயர். அவை மொத்தம் ஒரு கோடியே 20 இலட்சம் மீட்டர்கள் இருக்கின்றன. அவற்றிலே 90*

2012 ஏப்ரல் 16]

இலட்சம் மீட்டர்கள்—single phase—ஒருமுனை மின்சாரப் பயன்பாட்டில் உள்ளன. 30 இலட்சம் மீட்டர்கள் மும்முனை மின்சாரப் பயன்பாட்டில் உள்ளன. இதை மாற்றுவதற்கு மொத்தம் 1,366 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. மிகப் பெரிய அளவிலே செலவினம் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்காகத்தான் பதிலிலே சொல்லியிருக்கிறேன். படிப்படியாக—ஆனால் கொள்கை அளவிலே அனைத்தையும் மாற்றுவதற்கு அரசு—தமிழ்நாடு மின்சார வாரியம் கொள்கை அளவிலே முடிவு செய்து அதைப் படிப்படியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. Single phase மீட்டர் விலை 735 ரூபாய். அதற்கு 706 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. அதேபோல, 3 phase meter என்றால் 2,200 ரூபாய் விலை. அதை மாற்றுவதற்கு 660 கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆக மொத்தம், 1,366 கோடி ரூபாய் என்பதால்தான் அதை மாற்றுவதற்கு இப்பொழுது R–APDRP என்ற ஒரு திட்டம் மத்திய அரசினுடைய உதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. அதாவது, திருத்தி அமைக்கப்பட்டு விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ் R–APDRP என்ற ஒரு Scheme. அதாவது, Restructured Accelerated Power Development and Reforms Programme என்று பெயர். இந்தத் திட்டத்தின்கீழ் ஒட்டுமொத்தமாக இதை மாற்றுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எல்லாம் எடுக்கப்பட்டு, இப்பொழுது, 1,125 கோடி ரூபாய் செலவிலே கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளின்படி, மிக விரைவிலே அந்தப் பழைய மின் இயந்திர வகையிலான மீட்டர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்து, அதேசமயத்திலே இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற பற்றாக்குறையைப் போக்குவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்து, 9 இலட்சத்து 60 ஆயிரம் மீட்டர்கள் கொள்முதல் செய்வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. வருகின்ற 20 ஆம் தேதி Board meeting நடக்க இருக்கிறது. அந்த Board meeting–இலே ஒப்புதல் பெறப்பட்டவுடன், ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, இந்த மாதத்திலேயே மின் மீட்டர்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த மாதத்திலேயே அந்தப் பிரச்சினை முற்றுப்பெறவிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். இதற்கிடையிலே, தேவைப்பட்டவர்களுக்கு, தனியாருக்குத் தேவைப்பட்டால் அவரவர்கள் சொந்தமாக வாங்கிப்

பயன்படுத்திக்கொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஏற்கெனவே இதற்கான ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. தேவையானவர்கள் அவர்களுடைய சொந்தப் பொறுப்பிலே மீட்டர்களை வாங்கிக்கொண்டால் அவற்றைத் தமிழ்நாடு மின்சார வாரியத்திலே சோதனை செய்து, ஒப்புதல் பெற்று, அந்த மீட்டர்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 92, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

92—

விளையாட்டு மைதானம்

***1409—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம், ஜெகநாத நகரில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தினைப் பராமரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) ஆம்.

(ஆ) வில்லிவாக்கம் வடக்கு ஜெகநாத நகர் முதல் பிரதான சாலை மற்றும் மூன்றாவது பிரதான சாலை சந்திப்பில் அமைந்துள்ள சாலையோர நிலத்தின் மொத்தப் பரப்பளவு 1,350